தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com
நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




மலர் : 02 | இதழ் :207 | 4 - பக்கம் | 23.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6




எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

விளக்கம்:

ஒருவர் நேரடியான பகைக்குத் தப்பி வாழ முடியும்; ஆனால், அவர் செய்யும் தீய வினைகள் பெரும் பகையாகி அவரைத் தொடர்ந்து வருத்திக்கொண்டே இருக்கும்.

# ரூ.10,000 கோடி கொடுத்தாலும் தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம் - முதல்வர் ஸ்டாலின் ஆவேசம்

கடலூர்:பிப்-23 "தேசிய கல்விக் கொள்கையை ஏற்று, அந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான், 2,000 கோடி ரூபாய் கிடைக்கும். 10,000 கோடி ரூபாய் பணம் கிடைக்கும் என்று சொன்னாலும், நாங்கள் கையெழுத்துப் போடமாட்டோம். 2,000 ஆண்டுக்கு பின்னோக்கி நம்முடைய தமிழ்ச் சமூகம் செல்லக் கூடிய பாவத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். கடலூரில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் இன்று(பிப்.22) பெற்றோர்களைக் கொண்டாடுவோம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசியது: "தேசிய கல்விக் கொள்கையை ஏற்று, அந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான், 2,000 கோடி ரூபாய் கிடைக்கும். 10,000 கோடி ரூபாய் பணம் கிடைக்கும் என்று சொன்னாலும், நாங்கள் கையெழுத்துப் போடமாட்டோம். இந்தப் பணத்துக்காக நாங்கள் இன்று கையெழுத்து போட்டால், என்ன ஆகும்? 2,000 ஆண்டுக்கு



பின்னோக்கி நம்முடைய தமிழ்ச் சமூகம் சென்றுவிடும். அந்தப் பாவத்தை நான் ஒருபோதும் செய்யமாட்டேன். பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளின் திறமை வளர வேண்டுமா? அல்லது மூன்றாவது மொழி திணிக்கப்பட்டு ஒவ்வொரு வகுப்பிலும் படிப்பு தடைபட வேண்டுமா? பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் திறமை வளர வேண்டும் என்றுதானே நினைப்பார்கள். இன்னும் தெளிவாகக் கூறுகிறேன். நாம் எந்த மொழிக்கும் எதிரி அல்ல. இந்தி மொழியும் நமக்கு எதிரி அல்ல. அதைப் படிக்க யார் விரும்புகிறார்களோ, அவர்கள் இந்தி பிரச்சார சபாவுக்குச் சென்றோ, கே.வி. பள்ளிகளிலோ அல்லது வேறு வழியிலோ படிப்பதை தமிழ்நாடு ஒருபோதும் தடுத்ததும் இல்லை, தடுக்கப்போவதும் இல்லை. ஆனால், இந்தியை எங்கள் மீது திணிக்க நினைக்காதீர்கள். திணிக்க நினைத்தால், தமிழர் என்றொரு இனமுண்டும், தனியே அவர்க்கொரு குணமுண்டும் என்பதை தமிழ்நாடு காட்டிவிடும். இருமொழிக் கொள்கையால், தமிழக மாணவர்களின் திறமை எந்தளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை உலகம் முழுவதும் வாழக் கூடிய தமிழர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து மாநிலங்களும் மும்மொழிக் கொள்கையையும், தேசியக் கல்விக் கொள்கையையும் ஏற்றுக்கொண்ட நிலையில் தமிழகம் மட்டும் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என்று மத்திய கல்வி அமைச்சர் கேட்கிறார். அவருக்கு நான் கூறிக் கொள்கிறேன்... இது தமிழ்நாடு. தமிழை தாய்மொழியாக கொண்ட பெருமைக்குரியவர்கள் தமிழர்கள். எங்கள் உயிரைவிட மேலாக தமிழை மதிப்பவர்கள் நாங்கள். எங்கள் மொழியை அழிக்க எந்த ஆதிக்க மொழியை இணைத்தாலும் அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவர் ஒரு கருத்தை கூறியிருக்கிறார். ஒரு நிலத்தைக் கைப்பற்றுவதற்கு அதன் கலாசாரத்தைப் பின்னுக்குத் தள்ளி, மொழியை அழிப்பதே சிறந்த வழி என்று சொல்லியிருக்கிறார். அவர் பழைய வரலாற்றை கூறியிருந்தாலும், அது தமிழகத்தின் புதிய வரலாறாக, கொடிய வரலாறாக மாறிவிடக் கூடாது என்பதற்காகத்தான் போராடுகிறோம்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகானுக்கு விமானத்தில் உடைந்த இருக்கை - மன்னிப்பு கோரிய ஏர் இந்தியா



புதுடெல்லி: போபாலில் இருந்து டெல்லிக்கு ஏர் இந்தியா விமானத்தில் பயணித்த மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகானுக்கு உடைந்த இருக்கை வழங்கப்பட்ட நிலையில், அது குறித்து அவர் வெளியிட்ட பதிவை அடுத்து விமான நிறுவனம் மன்னிப்பு கோரியுள்ளது.

ஏர் இந்தியா விமானத்தில் தனக்கு நேர்ந்த துயரமான சம்பவத்தை சிவராஜ் சிங் சவுகான் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அதில் அவர், "பூசாவில் வேளாண் திருவிழாவை தொடங்கி வைக்கவும், குருக்ஷேத்திரத்தில் இயற்கை வேளாண்மை இயக்கத்தின் கூட்டத்தை நடத்தவும் அதனைத் தொடர்ந்து சண்டிகரில் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தவுமான பணிகள் காரணமாக, இன்று(சனிக்கிழமை) நான் போபாலில் இருந்து டெல்லிக்கு வர வேண்டி இருந்தது. இதற்காக, நான் ஏர் இந்தியா விமான எண் AI436 இல் டிக்கெட் முன்பதிவு செய்தேன். எனக்கு இருக்கை எண் 8C ஒதுக்கப்பட்டது. நான் போய் இருக்கையில் அமர்ந்தேன். இருக்கை உடைந்து உள்ளே சென்றுவிட்டது. அந்த இருக்கையில் உட்கார்ந்திருப்பது வேதனையாக இருந்தது. மோசமான இருக்கை ஏன் எனக்கு ஒதுக்கப்பட்டது என்று விமான ஊழியர்களிடம் கேட்டபோது? இந்த இருக்கை சரியில்லை என்பதால், இதன் டிக்கெட்டை விற்க வேண்டாம் என்று நிர்வாகத்திற்கு முன்பே தெரிவிக்கப்பட்டதாகவும், எனினும் தவறுதலாக இருக்கைக்கான டிக்கெட் விற்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். ஒரு இருக்கை மட்டுமல்ல, பல இருக்கைகள் அப்படித்தான் உள்ளன. என் சக பயணிகள், வேறு நல்ல இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொண்டனர். ஆனால் எனக்காக நான் ஏன் இன்னொரு நண்பரை தொந்தரவு செய்ய வேண்டும்? எனவே, அதே இருக்கையில் அமர்ந்து என் பயணத்தை முடிக்க முடிவு செய்தேன். ஏர் இந்தியா நிர்வாகத்தை டாடா எடுத்துக் கொண்ட பிறகு அதன் சேவை மேம்பட்டிருக்கும் என்று நினைத்திருந்தேன். ஆனால் அது தவறு என்பது தற்போது புரிகிறது. உட்காருவதில் உள்ள அசவுகரியத்தைப் பற்றி எனக்கு கவலையில்லை,

## காசி தமிழ் சங்கமத்தில் மொழிபெயர்ப்பு பட்டறை பாரதியாரின் கொள்ளுப்பேத்தி பங்கேற்பு



புதுடெல்லி: உத்தரப்பிரதேசம் மாநிலம் வாராணாசியில் காசி தமிழ் சங்கமம் 3.0 (கேடிஎஸ் 3.0) நடைபெறுகிறது. இதில் நேஷனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியா (என்பிடி) நடத்திய மொழிபெயர்ப்புப் பட்டறையில் பாரதியாரின் கொள்ளுப்பேத்தி முனைவர்.ஜெயந்தி முரளி கலந்து கொண்டார். உபி.,யின் வாராணாசியில் பிப்ரவரி 15-ல் கேடிஎஸ் 3.0 துவங்கியது. இதன் துவக்க விழாவில் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத், மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மற்றும் மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் கலந்து கொண்டனர். பிப்ரவரி 24 வரை நடைபெறும் இவ்விழாவின் ஒரு பகுதியாக நேற்று, என்பிடியால் மொழிபெயர்ப்புப் பட்டறை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் முனைவர்.ஜெயந்தி முரளி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். வாராணாசிவாசியான இவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் சகோதரியின் கொள்ளுப்பேத்தி ஆவார். இம்மொழிபெயர்ப்புப் பட்டறையில், பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் மற்றும் மாணவர்களால் 24 இந்தி சிறுவர் இலக்கிய நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. மொழிபெயர்ப்பாளர்கள் தாங்கள் செய்த மொழிபெயர்ப்புகளை ஆர்வத்துடன் எடுத்துரைத்துப் பின்னூட்டங்களைப் பெற்றனர். இந்த மொழிபெயர்ப்புகளை மேலும் செம்மைப்படுத்த தேவையான கருத்துக்களை முனைவர்.ஜெயந்தி முரளி வழங்கினார். கடந்த 2023 ஆம் ஆண்டின் கேடிஎஸ் 2.0 விலும் NBT-யால் மொழிபெயர்ப்புப் பட்டறை நடத்தப்பட்டது. இதில், 10 இந்தி சிறுவர் இலக்கிய நூல்கள் தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டன. ஆளுநர் ஆர்.என்.ரவி: இந்நூல்கள் மூன்றாம் காசி தமிழ் சங்கமத்தின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். ரவி மற்றும் பனாரஸ் இந்து பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சஞ்சய் குமார் ஆகியோர் இந்த மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டனர்.

## தமிழ் கட்டுரை போட்டியில் முதலிடம் பெற்ற தென்காசி மாணவிக்கு, தென்காசி மருத்துவமனை கண்காணிப்பாளர் பாராட்டு.



தென்காசி:பிப்-23 கடந்த ஜனவரி மாதம் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக நடைபெற்ற தமிழ் கட்டுரை போட்டியில் ,தென்காசியை சார்ந்த திருமதி மஞ்சம்மாள் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்பு மாணவி யோக ஸ்ரீ மாவட்ட அளவில் முதலிடமும், மாநில அளவில் முதலிடமும் பெற்று மிகப்பெரிய சாதனையை புரிந்துள்ளார். அவருக்கு தமிழக அரசு மாவட்ட அளவில் முதலிடம் பெற்றமைக்கு ரூபாய் 10,000 பரிசும், மாநில அளவில் முதலிடம் பெற்றமைக்கு ரூபாய் 15,000 பரிசுத்தொகையும் வழங்கி, பாராட்டி ,கௌரவித்துள்ளது. தமிழ் மொழி கட்டுரை போட்டியில் மாநில அளவில் முதலிடம் பெற்று ,தென்காசி மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த, மஞ்சம்மாள் அரசு மகளிர்மேல்நிலைப்பள்ளி மாணவியோக ஸ்ரீ க்கும்,அவரது பெற்றோருக்கும் , மாணவியுடைய ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளது. அவரை மாவட்ட ஆட்சித் தலைவர் பாராட்டி கௌரவித்துள்ளார். அவருடைய ஆரம்பக் கல்வி, நகராட்சி நடுநிலைப்பள்ளி 13வது வார்டு பள்ளி , ஆசிரியர் வின்சென்ட் தலைமையில் அவருடைய வீட்டிற்குச் சென்று மாணவியை பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர். தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் ஜெஸ்லின் ,மாணவி யோக ஸ்ரீயையும், அவருடைய பெற்றோர் முப்படாதி, திருமதி சுந்தரி முப்புடாதியையும் அழைத்து, பாராட்டி கௌரவித்தார். மாணவி யோக ஸ்ரீ மென்மேலும் வளர்ந்து மேலும் பல சாதனை புரிய வேண்டும் என வாழ்த்தி, அனைத்து மருத்துவர்கள் சார்பாக நினைவுப்பரிசு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உறைவிட மருத்துவர் செல்வ பாலா, குழந்தைகள் பிரிவு தலைமை மருத்துவர் கீதா, மகப்பேறு பிரிவு தலைமை மருத்துவர் புனிதவதி ,மருத்துவர்கள் ராஜேஸ்வரி, பிரதிபா, தலைமை செவிலிய கண்காணிப்பாளர் பத்மாவதி, தலைமை மருந்தாக ராமச்சந்திரன் அலுவலக உதவியாளர் துர்கா, தீயணைப்புத்துறை காவலர் மாதவன், ஆசிரியை தமிழ்ச்செல்வி, மருத்துவமனை பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# போதைப் பொருளுக்கு எதிரான மினீ மாரத்தான் லயன்ஸ் சங்கம் சார்பில் தொடங்கி வைத்த போது.




திருவாரூர்:பிப்-23 மாவட்டம் திருத்துறைப்பூண்டி நூற்றாண்டு அரிமா சங்கம், திருத்துறைப்பூண்டி காவல்துறை இணைந்து நடத்திய போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு மினி மாரத்தான் 2025 போட்டி புதிய பேருந்து நிலையம் சாய்ராம் மெட்ரிக் பள்ளி அருகில் நடைபெற்றது. நூற்றாண்டு அரிமா சங்க சாசன தலைவர் அரிமா. டாக்டர் முகமது ஆரிப் போட்டியை துவக்கி வைத்து தலைமை உரையாற்றினார். திருத்துறைப்பூண்டி காவல் ஆய்வாளர் மாரிமுத்து முன்னிலை வகித்தார். நூற்றாண்டு அரிமா சங்க தலைவர் அரிமா வி. ஏ. தங்கமணி அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். டிடிபி ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனர் அரிமா. எஸ் விஜயகுமார் அவர்கள் போதை பொருட்களுக்கு எதிரான உறுதிமொழி வாசித்தார் அதை அனைவரும் உறுதிமொழியை வாசித்து ஏற்றுக் கொண்டனர். நூற்றாண்டு அரிமா சங்க செயலாளர் ராஜ்மோகன், சங்க பொருளாளர் நவீன் குமார், உடனடி தலைவர் கார்த்திகேயன், அரிமா மணிவண்ணன், அரிமா மாதவன், அரிமா பாலசுப்ரமணியன், அரிமா முத்துக்குமார், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வெவ்வேறு சங்கங்களை சேர்ந்த உறுப்பினர்கள் பொதுமக்கள், பெற்றோர்கள், பத்திரிகை நண்பர்கள், பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட காவல்துறை நண்பர்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். இதில் 250க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் போட்டியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதன் மூலம் அந்த பகுதி மக்களுக்கு போதை பொருட்களுக்கு எதிரான வாசகம் அடங்கிய பதாதைகளை ஏந்தி மினி மாரத்தானில் கலந்துக் கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

# இந்தி மொழியை வைத்து அரசியல் செய்கிறது பாஜக - துரை வைகோ எம்.பி விமர்சனம்



மதுரை:பிப்-23 தவிட்டு சந்தையில் உள்ள மதிமுக நிர்வாகியின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் இன்று (பிப்.22) மதிமுக முதன்மைச் செயலாளரும், எம்.பி.யுமான துரை வைகோ பங்கேற்றார். பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியது: "பாஜக மாநில தலைவர் அண்ணாமலைக்கும், துணை முதல்வர் உதயநிதிக்கும் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியால் ஏற்பட்ட பிரச்சினை அல்ல. தமிழகத்துக்கு தேவை இருமொழிக் கொள்கையா, மும்மொழிக் கொள்கையா என்பதுதான் பிரச்சினை. அண்ணாமலை தமிழகத்தில் மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்கிறார். பாஜகவை தவிர அனைத்து இயக்கங்களும் தமிழகத்துக்கு இரு மொழிக் கொள்கைதான் தேவை என்கின்றனர். இருமொழிக் கொள்கையால் ஆங்கிலம் கற்றதால்தான் தமிழக மாணவர்கள் மருத்துவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றனர். ஆனால் உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பிஹார் மாநிலங்களில் பாஜக தலைவர்கள் ஆங்கிலம் தேவையில்லை என்றும், நாட்டில் ஆங்கிலமே இருக்கக் கூடாது என்கின்றனர். மூன்றாவது மொழியாக இந்தியை மட்டுமே கற்க வேண்டும் என ஏன் திணிக்கிறார்கள். மொழியை வைத்து அரசியல் செய்வது பாஜக மட்டுமே. இந்தியை திணிப்பதால் எதிர்க்கிறோம். இந்தியாவில் அதிகமாக பாலியல் வன்கொடுமை நடக்கும் மாநிலம் உத்தரப் பிரதேசம், டெல்லி. தமிழகத்தில் பாலியல் வன்கொடுமை விகிதம் குறைவாக உள்ளது. அதை தடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மதவாத அரசியலால் நாட்டுக்கு அச்சுறுத்தல் உள்ளது. பாஜகவை எதிர்க்கும் வல்லமை திமுகவுக்கு உள்ளதால் திமுக கூட்டணியில் இருக்கிறோம். அமெரிக்கா நூற்றுக்கணக்கான இந்தியர்களை கைவிலங்கிட்டு திருப்பி அனுப்பியது. அதில் அதிகமானவர்கள் வட இந்தியர்கள், இதில் யாரும் தமிழர்கள் இல்லை," என்று அவர் கூறினார். இந்த சந்திப்பின்போது பூமிநாதன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ரூ.2 லட்சம் லஞ்சம் வாங்கிய மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் சந்தோஷ் அதிரடி கைது



நீலகிரி: பிப்-23 உதகையில் பணி நிரந்தரம் செய்ய அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியரிடம் ரூ. 2 லட்சம் லஞ்சம் வாங்கிய நீலகிரி மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் சந்தோஷை லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் கையும் களவுமாக பிடித்து கைது செய்து நடவடிக்கை. உதகையில் தொடக்க கல்வி அலுவலர் சந்தோஷ் என்பவர் ஜான் சிபு மானிக் என்ற தற்காலிக ஆசிரியரை பணியை நிரந்தரம் செய்துதர ரூபாய் 2 லட்சம் லஞ்சம் பெற்றபோது அவரது வீட்டில் வைத்து லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் 21.02.25 வெள்ளிக் கிழமை அன்று இரவு கையும் களவுமாக பிடித்தனர். உதகை அருகே அரசு உதவி பெறும் பார்க் சைடு சிஎஸ்ஐ தொடக்கப் பள்ளியில் 2018 ஆண்டு முதல் செகன்டரி கிரேட் டீச்சராக தற்காலிகமாக பணியாற்றி வருபவர் ஜான் சிபு மானிக் இவரை 2019 ஆண்டு நிரந்தரமாக்க அப் பள்ளி நிர்வாகம் சார்பில் பரிந்துரை செய்யப்பட்ட நிலையில் தொடக்க கல்வி அலுவலர் சந்தோஷ் கால தாமதம் செய்து வந்ததாக கூறப்படுகிறது இந்த நிலையில் ஜான் சிபு மானிக் சென்னை உயர் நீதி மன்றத்தை நாடியுள்ளார். 2024 ஜூன் மாதம் ஐகோர்ட் இவரை நிரந்தர ஆசிரியராக பணி அமர்த்த உத்தரவிட்டது, நீதிமன்ற உத்தரவை அமல் படுத்த ஆசிரியரை அலைவிட்ட தொடக்க கல்வி அலுவலர் சந்தோஷ், முதலில் 15 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளார், பின்னர் 5 லட்சமாக குறைத்து கொடுத்தால் 2018 முதல் உள்ள பணிகாலத்தை சேர்த்து போட்டு உத்தரவு தருவதாகவும், இல்லை என்றால் குறைத்துப் போடுவதால் பல லட்சங்களை ஆசிரியர் இழக்க நேரிடும் என்று கூறியுள்ளார். இந் நிலையில் இம் மாதம் 18 ம் தேதி திரும்பவும் ஆசிரியரை அழைத்த தொடக்க கல்வி அலுவலர் சந்தோஷ் முன் பணமாக 2 லட்சத்தை உதகையில் உள்ள தனது வீட்டில் வந்து கொடுக்கும் படி கூறியுள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு ஆளான ஜான் சிபு மானிக் லஞ்ச ஒழிப்பு துறை அதிகாரிக்கு தகவல் தெரிவித்து அதன் அடிப்படையில் ஆய்வாளர் சண்முக வடிவிடம் ஆசிரியரிடம் ரசாயனம் தடவிய பணத்தை கொடுத்துள்ளனர் அந்தப் பணத்தை தொடக்கக் கல்வி அலுவலர் சந்தோஷிடம் கொடுக்கும் போது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு துறை ஆய்வாளர் சண்முக வடிவு,உதவி ஆய்வாளர்கள் சாதனப்பிரியா,சக்தி ரங்கநாதன் ஆகியோர் சந்தோஷை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர்.

# பாதாள சாக்கடை பணிக்காக உடைக்கப்படும் புதிய சாலைகள் - காஞ்சியில் அரசு நிதி வீணடிப்பு



காஞ்சிபுரம்: பிப்-23 மாநகராட்சியில் 1978-ம் ஆண்டு பாதாள சாக்கடை அமைக்கப்பட்டது. ஆனால் காஞ்சிபுரம் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை இணைப்புகள் இல்லை. புதிதாக இணைக்கப்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை இணைப்புக்காக ரூ.254 கோடி உலக வங்கியின் நிதி உதவியுடன் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை கொண்டு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது வேதாசலம் நகர், ராகவேந்திர நகர் ஆகிய பகுதிகளில் தீவிரமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த பாதாள சாக்கடை பணிக்கான குழாய் பதிப்பதற்காக புதிதாக போடப்பட்ட பல சாலைகளில் பள்ளங்கள் தோண்டப்பட்டு வருகின்றன. இதனால் அந்த பகுதியில் புதிதாக போடப்பட்ட பல சாலைகள் சேதமடைகின்றன. பாதாள சாக்கடை பணிகள் அவசியமான பணிகள் என்றாலும் பாதாள சாக்கடைக்கு ஏற்கெனவே திட்டமிட்டிருப்பார்கள். அப்படி இருக்கையில் பாதாள சாக்கடை அமைய உள்ள இடத்தில் புதிதாக சாலைகள் அமைத்து, அதனை ஏன் மீண்டும் உடைக்க வேண்டும். இதனால் அரசு நிதி வீணடிக்கப்படுகிறது. இப்போது இந்த சாலைகளை புதிதாக அமைப்பதற்கு மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவார்கள். ஒருங்கிணைந்த திட்டமிடல் இல்லாததால் இதுபோல் நிதி வீணடிக்கப்படுவதாக சமூக ஆர்வர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆணையர் விளக்கம்: இதுகுறித்து காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையர் நவேந்திரனிடம் கேட்டபோது ஏற்கெனவே செவிலிமேடு பேரூராட்சியாக இருந்து காஞ்சிபுரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை அமைக்கப்படுகிறது. தற்போது அந்த பகுதியில் இருப்பவை பேரூராட்சியாக இருக்கும்போது போடப்பட்ட சாலைகள். சில இடங்களில் மட்டும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பிறகு புதிய சாலைகள் போடப்பட்டுள்ளன. ஒரு வார்டில் பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கும்போது ஒரு பகுதியை விட்டுவிட்டு கொடுக்க முடியாது. அதனால் அந்த வார்டு முழுவதும் பள்ளம் தோண்டப்படுகிறது. இதுபோல் பிரச்சினையை தவிர்க்க குடிநீர் இணைப்புகளும் இந்த பள்ளத்திலேயே கொடுக்கும்படி கூறியுள்ளோம். தற்போது நடைபெறும் பணிகள் திட்டமிட்டு நடைபெறுகின்றன என்றார்.

# மும்மொழிக் கொள்கையின் எந்த இடத்திலும் இந்தி கட்டாயம் என கூறிவில்லை - எல்.முருகன் விவரிப்பு



நாமக்கல்லில்: பிப்-23 நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் மத்திய இணையமைச்சர் எல்.முருகன் கலந்து கொண்டார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "இந்தியா 100-வது சுதந்திர தினம் கொண்டாடும் சமயத்தில் இந்தியா வல்லரசு நாடாக இருக்க வேண்டும் என்பதற்கு அடித்தளமாக இருக்கும் வகையில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. அனைத்து தரப்பு மக்களையும் முன்னேற்றுவதற்கான பட்ஜெட்டாக அமைந்துள்ளது. காங்கிரஸ் மத்தியில் இருந்த சமயத்தில் ரூ.800 கோடி மட்டும் ரயில்வே துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், பாஜக தலைமையிலான மத்திய அரசு ரூ.6,500 கோடியை ரயில்வே துறைக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு, தமிழகத்துக்கு ரூ.11 லட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழுக்கும், தமிழ் பண்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்தான் தொன்மையான மொழி என வெளிநாடுகளுக்கு பிரதமர் மோடி செல்லும் சமயங்களில் வலியுறுத்துகிறார். டெல்லியில் அரவிந்த் கேஜ்ரிவால் மத்திய அரசுடன் இணக்கமாக இல்லாததால் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்பட்டன. அதனால் டெல்லியில் மக்கள் பாஜகவுக்கு வாக்களித்தனர். தமிழகத்தில் விரைவில் டபுள் இன்ஜின் சர்க்கார் வர உள்ளது. புதிய கல்விக் கொள்கையின் நோக்கம் தாய் மொழியை ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான். 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை தாய்மொழியை ஊக்குவிக்கும் வகையில் புதிய கல்விக் கொள்கை அமைக்கப்பட்டுள்ளது. மும்மொழிக் கொள்கையின் எந்த இடத்திலும் இந்தி கட்டாயம் என சொல்லவில்லை. இந்தி பிரச்சார சபாவில் அதிகளவில் சேர்ந்து இந்தி படிக்கின்றனர். திமுகவினர் நடத்தும் பள்ளிகளில் 3-வது மொழியாக இந்தி உள்ளது. ஆனால், அரசுப் பள்ளியில் 3-வது மொழியாக மாணவர்கள் இந்தி படிக்க முடியாதபடி வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

# திருச்சி பாரதிதாசன் பல்கலை. பேராசிரியர்கள் பதவி உயர்வு நடைமுறையில் சமூக அநீதி - அன்புமணி

சென்னை:பிப்-23 திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ஆசிரியர் பதவி உயர்வில் சமூக அநீதியைப் போக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பதவி உயர்வு வழங்கும் நடைமுறைகள் தொடங்கியுள்ள நிலையில், அந்தப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றி பல்கலைக்கழகப் பணிக்கு மாற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு பேராசிரியர் பணிக்கான பதவி உயர்வு மறுக்கப்பட்டுள்ளது. இந்த சமூக அநீதி கண்டிக்கத்தக்கது. பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு பேராசிரியர், மூத்த பேராசிரியர் நிலை வரையிலும், கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு இணைப் பேராசிரியர் வரையிலும் பதவி உயர்வு வழங்கப்படுவது வழக்கம். 2000-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பல உறுப்புக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அவற்றுக்கு பல ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 2019-ஆம் ஆண்டில் உறுப்புக் கல்லூரிகள் அனைத்தும் அரசு கல்லூரிகளாக மாற்றப்பட்டனர். அப்போது பல்கலைக்கழகத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி தமிழக அரசு கேட்டுக்கொண்டது. அதன்படி 34 ஆசிரியர்கள் மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு அழைத்துக் கொள்ளப்பட்டார்கள். இப்போது பல்கலைக்கழகத்துக்கு மீண்டும் திரும்பி விட்ட அவர்களுக்கு பேராசிரியர் நிலை வரை பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும். ஆனால், அவர்களை ஏற்கெனவே இருந்த கல்லூரி ஆசிரியர்களாகவே கருதி அவர்களுக்கு இணைப் பேராசிரியர் நிலை வரை மட்டும்தான் பதவி உயர்வு வழங்கப்படும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் கூறுகிறது. இது தவறு மட்டுமின்றி, சமூக அநீதியும் ஆகும். அவர்கள் 34 பேரும் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்கள் என்பதால் அவர்களுக்கு பேராசிரியர் நிலை வரை பதவி உயர்வு வழங்கப்படுவதை பாரதிதாசன் பல்கலைக்கழக நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# ராக்கெட் ஏவுதளத்துக்கு நிலம் எடுக்க எதிர்ப்பு: உடன்குடியில் கிராம மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்



தூத்துக்குடி:பிப்-23 குலசேகரன்பட்டினத்தில் அமையவுள்ள ராக்கெட் ஏவுதளம், விண்வெளித் தொழில் நிறுவனத்துக்கு உடன்குடி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நிலம் எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து உடன்குடியில் கிராம மக்கள், வியாபாரிகள் மற்றும் அரசியல் கட்சியினர் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினம் அருகே கூடல் நகர், அமராபுரம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய பகுதியில் சிறிய ரக ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கு சுமார் 2,233 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. இதில் நிலம், வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகள், நிலம் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தமிழக அரசின் தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகக் துறை சார்பில் விண்வெளித் தொழில் நிறுவனம் அமைப்பதற்கு ஆதியாக்குறிச்சி ஊராட்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் சுமார் 1,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனால் தங்கள் வாழ்வாதாரம், நிலம் பாதிக்கப்படும் எனக் கூறிய ஆதியாக்குறிச்சி கிராம விவசாயிகள் கடந்த 4-ம் தேதி உடன்குடியில் தடையை மீறி உண்ணாவிரதப் போராட்டம் நடத்த திரண்டனர். இதில் பங்கேற்ற 203 விவசாயிகளை போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து, அடுத்தக்கட்ட போராட்டங்கள் குறித்து கடந்த சில நாட்களுக்கு முன்பு உடன்குடியில் ஆலோசனை கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில், நிலம் எடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல கட்ட போராட்டங்களை அமைதி வழியில் நடத்த வேண்டும். வீடுகள் தோறும் கருப்புக் கொடி கட்டுவது, திண்ணைப் பிரச்சாரம் செய்வது, நிலம் எடுப்பால் பாதிக்கப்படாத மக்களையும் போராட்டத்தில் ஈடுபட வைப்பது என முடிவெடுக்கப்பட்டது.

# ஊழல் கூடாரத்தில் டப்பிங் பணி... - மநீம தலைவர் கமல்ஹாசன் மீது தவெக விமர்சனம்




சென்னை: பிப்-23 “தொலைக்காட்சிப் பெட்டியை உடைத்து வீரவசனம் பேசியவர், ஊழல் கூடாரத்தில் இளைப்பாறிக் கொண்டு டப்பிங் பணி செய்கிறார்,” என மநீம தலைவர் கமல்ஹாசனை தவெக மறைமுகமாகவும் கடுமையாகவும் விமர்சனம் செய்துள்ளது. இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழக மாநில இணைச்செய்தித்தொடர்பாளர் எஸ்.ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இவ்வளவு நாளாக ஒருவர் பேசியது தான் மக்களுக்கு புரியவில்லை என்றால், இப்போது அவர் யார், எதற்காக வந்தார் என்பது அவருக்கே புரியாமல் பேசி வருகிறார். அவர் யாரென்று நேரடியாக சொல்ல வேண்டிய அவசியமில்லை. சொல்லாமலே மக்களுக்கு புரியும். ரசிகர்களும், மக்களும் வாக்காளர்களாக மாறுவது அந்த நடிகரின் மக்கள் செல்வாக்கு, தலைசிறந்த கொள்கைகள், தமிழகம் சார்ந்த அரசியல் முன்னெடுப்பு, மக்கள் நலன் சார்ந்த பணிகள் ஆகியவற்றை சார்ந்தது. ரசிகர்கள் வேறு வாக்காளர்கள் வேறு என்று திடீரென போதி மரம் அடியில் அமர்ந்து ஞானம் பெற்றது போல் அறிவாலயத்தில் கலந்து கரைந்த பின் பேசி வருகிறார்கள். எம்ஜிஆர் ரசிகர்கள் வேறு, சிவாஜி ரசிகர்கள் வேறு, ரஜினி ரசிகர்கள் வேறு, மற்ற ரசிகர்கள் வேறு, எங்கள் தலைவர் விஜய் ரசிகர்கள் வேறு. எம்ஜிஆரின் அரசியல் வெற்றியை சிவாஜி பெற முடியவில்லை. எம்ஜிஆர் தனது ரசிகர்களை அரசியல்மயப்படுத்தி வாக்காளர்களாக்கியது போல எங்கள் தலைவர் கோடிக்கணக்கான ரசிகர்களை மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழக மக்களையும் எப்படி வாக்காளர்களாக மாற்றுகிறார் என்பதை பாருங்கள். ஒருவரது செயல்பாடுகள் தான் வெற்றியையும் தோல்வியையும் நிர்ணயம் செய்யும். எந்த ஊழல் கூடாரத்துக்கு எதிராக தொலைக்காட்சி பெட்டியை எல்லாம் உடைத்து வீர வசனம் பேசி வந்தார்களோ, இன்று அதே ஊழல் கூடாரத்தில் சுயநலனுக்காக இளைப்பாறிக் கொண்டு அவர்களுக்காக டப்பிங் பணிகள் செய்து வருகிறார்கள். மக்களுக்காக மக்களை நம்பி உழைத்தால் என்றுமே மக்கள் ஆதரிப்பார்கள். பணி ஓய்வு காலத்தில் அரசியலுக்கு வந்துவிட்டு ‘பிக்பாஸ்’ பணிகளை செய்து வந்தால் இந்த நிலைமை தான் ஏற்படும் என்பதை உணர வேண்டும். இனியாவது ஆளும் ‘பிக்பாஸ்’களுக்காக உழைக்காமல் மக்களுக்கு உண்மையாக உழையுங்கள். பொது நலத்துடன் உழையுங்கள்,” என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# விடுதலை நற்பண்பு கல்வி நிலைய மாணவர்கள் விண்வெளி ஆராய்ச்சியில்



திருவள்ளூர்: பிப்-23 திருவள்ளூர் மாவட்டத்தில் சுமார் 30க்கும் மேற்பட்ட இடங்களில் விடுதலை நற்பண்பு கல்வி மையம் மையம் ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் மாலை நேர வகுப்பு இலவசமாக பயின்று வருகின்றனர் இதில் ஒவ்வொரு குழந்தைகளும் அறிவியல் துறை வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அறிவியல் துறையில் சிறந்த விளங்குவதற்காகவும் வருகின்ற சந்ததிகள் ஒவ்வொரு குழந்தைகளும் மக்கள் போற்றும் அப்துல் கலாம் ஆக போற்ற வேண்டும் என்பதற்காக நமது கல்வி மையத்தில் அறிவை பகிர்வோம் என்ற துறையை வகுத்து ஒவ்வொரு மாணவர்களுக்கும் சிந்தனை தூண்டுதலும் செயற்கை கோள்கள் பற்றிய அறிவியல் நுட்பங்களையும் டெலஸ்கோப் மூலமாக விண்வெளியில் உள்ள கோள்களைப் கோள்கள் மற்றும் நிலவு நட்சத்திரம் பற்றி ஆராய்ந்தனர் அதன் பிறகு ஒவ்வொரு கோள்களும் எவ்வாறு செயல்படுகிறது என்பதை மாணவர்கள் சிறப்பான முறையில் ஆராய்ந்து தங்களுடைய சந்தேகங்களை சிறப்பாக கேட்டு அறிந்தனர் இது ஏற்பாடு விடுதலை சமூகநல அறக்கட்டளையின் மூலமாக மிகவும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது பொன்னேரி சுற்றியுள்ள கிராமங்களில் விண்வெளி ஆராய்ச்சியில் 167 மாணவர்கள் கலந்து கொண்டனர் பயிற்சியாளர் sky secret மற்றும் இன்டர்கிரடி பீப்பிள்ஸ் அமைப்பினருக்கும் திரு ஜெய் மற்றும் ரோசிணி அவர்களுக்கும் இந்த ஏற்பாடு செய்த விடுதலை சமூக நல அறக்கட்டளை நிறுவனர் பி.ஆர் ஆறுமுகம் ஆசிரியர்கள் அம்சவள்ளி, கவிதா, வினோதினி ,பிரதாப் தாரணி, மற்றும் கிராம மக்கள் உடன் இருந்தனர்

# கனியாமூர் பள்ளி கலவர வழக்கு: விழுப்புரம் நீதிமன்றத்தில் 37 சிறுவர்கள் ஆஜர்



கனியாமூர்: பிப்-23 பள்ளி கலவர வழக்கு தொடர்பாக விழுப்புரம் நீதிமன்றத்தில் 37 சிறுவர்கள் ஆஜரானார்கள். கள்ளக்குறிச்சி மாவட்டம் கனியாமூரில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ்-2 பயின்ற மாணவி, 2022-ல் மர்மமான முறையில் உயிரிழந்தார். இதையடுத்து, பள்ளி வளாகத்தில் நடந்த போராட்டம் வன்முறையாக மாறி, அங்கிருந்த பொருட்கள் அடித்து நொறுக்கப்பட்டன. வாகனங்களுக்கும் தீ வைக்கப்பட்டன. இது தொடர்பாக 53 சிறுவர்கள் உட்பட 916 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, 500-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்குகளை சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து வருகிறது. இதில் 53 சிறுவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் மீதான விசாரணை விழுப்புரத்தில் உள்ள இளஞ்சிறார் நீதிக் குழுமத்தில் நடைபெற்று வருகிறது. இதில் தொடர்புடைய 53 பேரில் 37 பேர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். 16 பேர் ஆஜராகவில்லை. வழக்கு தொடர்பாக 1,100 பக்க இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வழக்கில் தொடர்புடையவர்களின் இ-மெயில் முகவரியைப் பெற்று, அவர்களுக்கு அறிக்கையின் நகலை அனுப்பி வைக்குமாறு இளஞ்சிறார் நீதிக்குழும நீதிபதி (பொ) ராதிகா உத்தரவிட்டார். மேலும், வழக்கு விசாரணையை மார்ச் 21-ம் தேதிக்கு தள்ளிவைத்தும் உத்தரவிட்டார்.

# 100 வேலைத் திட்ட முறைகேடுகளை விசாரிக்க வேண்டும் - தமிழக அரசுக்கு ராமதாஸ் வலியுறுத்தல்




சென்னை: பிப்-23 தமிழகத்தில் ஊரக வேலை உறுதித் திட்டத்தில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து மாநில அரசு உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் 2024-25-ஆம் ஆண்டில் ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை செயல்படுத்தியதில் 78 ஆயிரத்து 784 முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், அவற்றின் மூலம் ரூ.14 கோடிக்கும் கூடுதலான தொகை கையாடல் செய்யப்பட்டிருப்பதாகவும் சமூகத் தணிக்கை வாயிலாக தெரியவந்துள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. அப்பட்டமான முறைகேடுகள் நடந்திருப்பது தெரியவந்திருக்கும் போதிலும், அவற்றின் மீது தமிழக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது. ஊரக வேலைத் திட்டத்தின்படி பணிக்கு வராதவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது என்பது தான் முதன்மைக் குற்றச்சாட்டு ஆகும். லட்சக்கணக்கானோருக்கு அவர்கள் செய்த பணியின் அளவு அதிகரித்து காட்டப்பட்டு, பணம் வழங்கப்பட்டதாகக் கணக்குக் காட்டிசுருட்டப்பட்டிருக்கிறது. சிவகங்கை மாவட்டத்தில் கஞ்சிரங்கால் ஊராட்சியில் மட்டும் எந்த வேலையும் செய்யாத 37 பேருக்கு மொத்தம் ரூ.8.25 லட்சம், அதாவது சராசரியாக ஒருவருக்கு ரூ.22,297 வீதம் வழங்கி மோசடி செய்யப்பட்டுள்ளது. விழுப்புரம், விருதுநகர், திருவள்ளூர், புதுக்கோட்டை உள்ளிட்ட பல மாவட்டங்களில் இத்தகைய மோசடிகள் நடைபெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் நடைபெற்ற மோசடிகள் குறித்த அனைத்து விவரங்களும் தமிழக அரசிடம் உள்ளன. ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் முறைகேடுகள் இல்லாமல் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காகத் தான் சமூகத் தணிக்கை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதில் தெரியவரும் முறைகேடுகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமை ஆகும். ஆனால், தமிழக அரசு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காததன் மூலம் முறைகேடுகளில் ஈடுபட்டவர்களை பாதுகாக்க முயல்கிறது என்பது உறுதியாகியுள்ளது. தமிழ்நாட்டில் நடந்த முறைகேடுகளில் 6302 புகார்கள் மீது மட்டும் தான் தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மோசடி செய்யப்பட்ட பணத்தில் ரூ.1.89 கோடி மட்டுமே மீட்கப்பட்டுள்ளது. இந்த மோசடிகளை செய்த பணியாளர்கள், அதிகாரிகள் மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்கள் தான் இப்போதும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை களத்தில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதால் முறைகேடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்த நிதி போதுமானதாக இல்லை என்பதால், கடந்த சில மாதங்களாக பணி செய்த மக்களுக்கு இன்று வரை ஊதியம் வழங்கப்படவில்லை. உழைத்த மக்களுக்கு இன்னும் ஊதியம் வழங்கப்படாத நிலையில், எந்த வேலையும் செய்யாதவர்களுக்கு பணத்தை வாரி இறைப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. ஊரக வேலை உறுதித் திட்டம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட உன்னதத் திட்டம் ஆகும். ஆனால், அது இன்றைய ஆட்சியாளர்களால் ஊழல் திட்டமாக மாறியிருக்கிறது. தமிழ்நாட்டில் ஊரக வேலை உறுதித் திட்டத்தில் நடைபெற்றுள்ள முறைகேடுகள் குறித்து தமிழக அரசு உடனடியாக விசாரணை நடத்த வேண்டும். இந்த மோசடியில் சம்பந்தப்பட்ட அனைவர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின்படி பணி செய்து இதுவரை ஊதியம் பெறாதவர்களுக்கு உடனடியாக ஊதியம் வழங்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

# திருப்பரங்குன்றம் விவகாரத்தில் 40 வழக்குகள் பதிவு: உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்



திருப்பரங்குன்றம்: பிப்-23 கோயில் மற்றும் தர்கா விவகாரத்தில் இதுவரை 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மதுரையைச் சேர்ந்த சையது ராஜா, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: திருப்பரங்குன்றம் சிக்கந்தர் தர்காவில் அனைத்து சமூகத்தினரும் வழிபாடு நடத்துவது வழக்கம். அங்கு கந்தூரி நடத்துவது தொடர்பாக பொதுமக்கள், இஸ்லாமிய மக்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர். ஆனால், சில கட்சிகள், அமைப்புகள், மக்கள் மத்தியில் பிரிவினையை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு, மதப் பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றன. இதைக் கண்டித்து திருப்பரங்குன்றம் சன்னதி தெருவில் இருந்து, திருப்பரங்குன்றம் பேருந்து நிலையம் வரை பேரணி நடத்த அனுமதி கோரி போலீஸாரிடம் மனு அளித்தோம். இதுவரை அனுமதி வழங்கவில்லை. பேரணிக்கு அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்த மனு நீதிபதி தனபால் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. கூடுதல் குற்றவியல் அரசு வழக்கறிஞர் ஆர்.எம்.அன்புநிதி வாதிடும்போது, “திருப்பரங்குன்றம் விவகாரத்தில் மத மோதல்களை தூண்டும் வகையில் ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்த அனுமதி வழங்கக் கூடாது என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சில நாட்களுக்கு முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்தில், மதப் பிரச்சினையைத் தூண்டும் வகையில் சிலர் பேசியுள்ளனர். திருப்பரங்குன்றம் மக்கள் அமைதியாக வாழ்கின்றனர். சம்பந்தம் இல்லாமல் சில அமைப்புகள், கட்சிகள் திருப்பரங்குன்றத்தில் பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றனர். திருப்பரங்குன்றத்தில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தையில், ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்த அனுமதி வழங்கக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. திருப்பரங்குன்றம் கோயில் மற்றும் தர்கா விவகாரத்தில் இதுவரை 40 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால் பேரணிக்கு அனுமதி வழங்கக் கூடாது” என்றார். இதையடுத்து நீதிபதி, “திருப்பரங்குன்றத்தில் சட்டம்-ஒழுங்கு மற்றும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தப் போராட்டத்துக்கும் அனுமதி வழங்க முடியாது. பொதுமக்கள் நலன் மற்றும் சட்டம்-ஒழுங்கை கருத்தில்கொண்டு, போலீஸார் அனுமதி மறுத்தது சரியானதுதான். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது” என உத்தரவிட்டார்.

# தமிழக காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள் பிரியங்கா காந்தியுடன் சந்திப்பு: செல்வப்பெருந்தகையை மாற்ற வலியுறுத்தல்



டெல்லியில்: பிப்-23 முகாமிட்டுள்ள காங்கிரஸ் மாவட்ட தலைவர்கள், பிரியங்கா காந்தியை நேற்று சந்தித்து மாநில காங்கிரஸ் தலைவரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தினர். தமிழக காங்கிரஸ் தலைவராக பொறுப்பேற்ற செல்வப்பெருந்தகை, மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, தொண்டர்களை சந்தித்து கருத்துகளை கேட்டு வந்தார். அப்போது தமிழகத்தில் காங்கிரஸை பலப்படுத்துவோம் என தொண்டர்கள் மத்தியில் உறுதி அளித்திருந்தார். அதைத் தொடர்ந்து செயல்படாத மாவட்ட தலைவர்கள் மாற்றப்படுவார்கள் என்றும், நன்றாக வேலை செய்யும் மாவட்டத் தலைவர்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் தெரிவித்திருந்தார். இந்நிலையில், மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட தலைவர் பதவிகளுக்கு இணைய வழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக செல்வப்பெருந்தகை அறிவித்திருந்தார். இதற்கு மாவட்ட தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் தொடர்ச்சியாக, செல்வப்பெருந்தகை மீது அதிருப்தியில் இருந்த 25 மாவட்ட தலைவர்கள், கடந்த 19-ம் தேதி டெல்லி சென்று, தமிழக மேலிட பொறுப்பாளரை சந்தித்துப் பேசினர். அப்போது, மாநில தலைவர் செல்வப்பெருந்தகையை மாற்ற வேண்டும் என வலியுறுத்தினர். மாவட்ட தலைவர்களையும், எம்.பி.க்களையும், இதர மக்கள் பிரதிநிதிகளையும் செல்வப்பெருந்தகை மதிப்பதில்லை என குற்றஞ்சாட்டினர். தொடர்ந்து, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோரை சந்தித்து புகார் தெரிவிக்க டெல்லியிலேயே முகாமிட்டுள்ளனர். இதற்கிடையில், பிரியங்கா காந்தியை நேற்று சந்தித்து, செல்வப்பெருந்தகையை மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253



# உலக தாய்மொழி தினம்: முதல்வர், அரசியல் தலைவர்கள் வாழ்த்து



முதல்வர்: பிப்-23 மு.க.ஸ்டாலின்: எம்மொழிக்கும் சளைத்ததல்ல எம் மொழி. இலக்கியங்களில் புதைந்திருந்த வரலாற்றை மண்ணில் அகழாய்ந்து நிறுவி வருகிறோம். அகத்திலும் புறத்திலும் அன்பும் வீரமும் கொண்டு வாழும் நற்றமிழர் தாய்மொழி, போற்றுதலுக்குரிய பழமையான மொழி மட்டுமல்ல; பிறமொழி துணையின்றித் தனித்து இயங்கும் ஆற்றல்கொண்ட செம்மொழி. உலகெங்கும் பரவட்டும் நம் உயர்தனிச் செம்மொழி. தாய்மொழிக் கல்வியை ஊக்கப்படுத்தும் ‘தேசிய கல்விக் கொள்கையை’ ஏற்படுத்திக் கொடுத்த பிரதமர் நரேந்திர மோடிக்கு மனமார்ந்த நன்றி. தமிழ் மொழியை, தமிழர்களாகிய நாம் அனைவரும் பெருமையுடன் போற்றுவோம். துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்: தாய்மொழி என்பது தொடர்புக்கு உதவும் கருவி மட்டுமல்ல. ஓர் இனத்தின் அடையாளம், பண்பாடு, வரலாற்றின் அடித்தளம். தமிழைக் காக்க வேண்டும் என்ற நம் உணர்வுக்கும், இந்தியைத் திணிக்க வேண்டும் எனும் பாசிச சூழ்ச்சிக்கும் இதுவே அடிப்படை. தமிழை வீழ்த்த வந்த சூழ்ச்சிகளை எல்லாம் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டாக தமிழகம் வீழ்த்தியே வந்திருக்கிறது. இனியும் வீழ்த்தும். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: எல்லா மொழிகளுக்கும், எம்மொழி பேசும் மக்களின் உணர்வுகளுக்கும் சமத்துவப் போக்குடன் எப்போதும் மதிப்பளித்து, அதேசமயம் எம்மொழியை நம்மீது எவர் திணிக்கத் துணிந்தாலும் அதனை ‘உள்ளத்தில் தமிழ் - உலகுக்கு ஆங்கிலம்’ என்ற பகுத்தறிவு வாய்ந்த இருமொழிக் கொள்கையால் வெல்வோம் என உறுதியேற்போம். தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை: பிரதமர் நரேந்திர மோடி கொண்டு வந்துள்ள தேசிய கல்விக் கொள்கை, 5-ம் வகுப்பு வரை தாய்மொழியில் அடிப்படைக் கல்வியை வலியுறுத்துகிறது. தாய்மொழியாம் தமிழை அடிப்படையாகக் கொண்டு, பல மொழிகள் கற்போம். தமிழ் மொழியின் பெருமையை உலகறியச் செய்வோம். தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை: தேசிய இனங்களுக்கான உரிமைகளை, அவர்களது மொழி, பண்பாடு ஆகியவற்றை, ஒற்றை ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் துடிக்கும் எந்தவொரு அரசும் இறுதியில் சிதறுண்டு போனதையே உலக வரலாறு நிரூபித்துள்ளது. எனவே, பன்முகத் தன்மையைப் பாதுகாத்திடுங்கள். திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி.: தமிழரின் தனிப்பெரும் உணர்வாக, உலக மொழிக்கெல்லாம் ஒளிதரும் செம்மொழியாக உதிரத்தில் கலந்துவிட்ட தாய்த்தமிழை போற்றி வணங்குவோம். ஆதிக்க திணிப்புகளுக்கு அஞ்சாமல் அன்னை தமிழைக் காக்க உறுதியேற்போம். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி: சமஸ்கிருதப் பண்பாட்டுப்படையெடுப்பை முறியடிப்போம். இதுவே உலகத் தாய்மொழி நாளில் நமது உறுதி. அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: தாய்மொழிகளின் சிறப்பையும், அவசியத்தையும் உணர்த்துவதற்காக கொண்டாடப்படும் இந்நாளில், உலகின் மூத்த மொழியாக, தமிழகத்தின் தாய்மொழியாக விளங்கும் தமிழ் மொழியின் மேன்மையை போற்றுவோம். தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்: அன்னை மொழி காப்போம் அனைத்து மொழியும் கற்போம். முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்: தமிழக மக்கள் அனைவருக்கும் தாய்மொழி தின நல்வாழ்த்துகள். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர். இதேபோல், தமிழகத்தின் அனைத்து அரசு அலுவலகங்களிலும் உலக தாய்மொழி தினத்தையொட்டி, அலுவலர்கள் உறுதிமொழியேற்றுக் கொண்டனர்.

# பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவ 2 காரணங்கள்: கிருஷ்ணகிரி சம்பவத்தை முன்வைத்து அன்புமணி கருத்து






சென்னை:பிப்-23 பெண்களைப் பாதுகாப்பதில் தமிழக அரசு படுதோல்வி அடைந்துள்ளது. இனியாவது விழித்துக் கொண்டு தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஆபத்தான சூழல் நிலவுவதைப் போக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகில் உள்ள மலைக்கு தமது உறவினருடன் சென்ற திருப்பத்தூரைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர், கஞ்சா போதையில் இருந்த 4 மனித மிருகங்களால் கத்தி முறையில் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருக்கிறார். அவரிடமிருந்து நகை, பணம் உள்ளிட்டவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதும், அதைத் தடுக்க தமிழக அரசும், காவல் துறையும் எந்த நடவடிக்கையும் எடுக்காததும் கண்டிக்கத்தக்கவை. தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட பாலியல் வன்கொடுகளை நடந்துள்ளன. பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் அதிகரித்து வருவது குறித்து தமிழகத்தின் அனைத்துத் தரப்பிலிருந்தும் கண்டனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆனால், பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய எந்த நடவடிக்கையும் இன்று வரை எடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் வெளியில் நடமாடுவதற்கே அஞ்சும் நிலைதான் நிலவுகிறது. இதற்காக தமிழக ஆட்சியாளர்கள் தலைகுனிய வேண்டும். பெண்களை பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்காத தமிழக அரசு, பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்கிறோம் என்பதையே மீண்டும் மீண்டும் கூறி வருகிறது. கிருஷ்ணகிரி கொடூரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் கூட துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்டுள்ளனர். ஆனால், அதுமட்டும் அரசின் கடமை அல்ல... பெண்களை சீண்டினால் கடுமையான நடவடிக்கை பாயும் என்ற சட்டப்படியான அச்சத்தை உருவாக்கி பெண்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டியது தான் அரசின் முதல் கடமை என்பதை தமிழக ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதற்கு இரு அம்சங்கள் தான் முதன்மைக் காரணம் ஆகும். அவற்றில் முதலாவது குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு ஆட்சியாளர்களின் மறைமுக ஆதரவு இருப்பது. இரண்டாவது, தமிழ்நாடு முழுவதும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம் கட்டுப்பாடின்றி தொடர்வது ஆகும். கஞ்சா போதையில் நடமாடும் மனிதர்கள் அனைவரும் மிருகங்கள். அவர்கள் எந்த நேரமும் வெடித்து பேரழிவை ஏற்படுத்தக் காத்திருக்கும் வெடிகுண்டுக்கு ஒப்பானவர்கள் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்து பெண்களை பாதுகாப்பதில் தமிழக அரசு தோல்வியடைந்து விட்டது. தமிழக அரசு இனியாவது விழித்துக் கொண்டு தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஆபத்தான சூழல் நிலவுவதைப் போக்க வேண்டும். அதற்காக கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை ஒழிக்கவும், கண்காணிப்பை தீவிரப்படுத்தவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# குட் பேட் அக்லி பின்னணி இசை ஸ்பெஷல் என்ன? - ஜி.வி.பிரகாஷ் விவரிப்பு



‘குட் பேட் அக்லி’ பின்னணி இசையில் தான் புகுத்தியுள்ள சிறப்புத் தன்மைகள் குறித்து பேட்டி ஒன்றில் விவரித்து இருக்கிறார் ஜி.வி.பிரகாஷ். மார்ச் 7-ம் தேதி ஜி.வி.பிரகாஷ் நாயகனாக நடித்து தயாரித்துள்ள ‘கிங்ஸ்டன்’ வெளியாகவுள்ளது. இதனை பல வழிகளில் விளம்பரப்படுத்தி வருகிறார் ஜி.வி.பிரகாஷ். இதற்காக அளித்த பேட்டியொன்றில் ‘குட் பேட் அக்லி’ படத்தின் பின்னணி இசை குறித்து பேசியிருக்கிறார். ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் நடித்துள்ள அப்படத்தின் இறுதிகட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ‘குட் பேட் அக்லி’ படத்தின் பின்னணி இசை குறித்து ஜி.வி.பிரகாஷ் “‘கிரீடம்’ படம் முழுக்க கதையை மையப்படுத்தியே இருக்கும். அதில் 3 ஹிட் பாடல்கள் கொடுத்தேன். 18 ஆண்டுகள் கழித்தும் கூட இப்போது அப்பாடல்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்த முறை முழுக்கவே நாயகனை மையப்படுத்தியே கதை. நாயகனின் மாஸ் காட்சிகள் அனைத்துக்குமே எனது பெஸ்ட் என்னவோ அதில் பணிபுரிந்துள்ளேன். அதை பல பேர் செய்துவிட்டார்கள். அவர்களிடமிருந்து மாறுபட்டு நான் என்ன பண்ணப்போகிறேன் என்ற கேள்விக்கு சரியான பதிலாக என் இசை இருக்கும். ஆதிக் எப்போதுமே வித்தியாசமான இசையை விரும்புகிறவர். திரையில் கொண்டாட்டமாக இருக்க விரும்புகிறவர். அதற்கு தகுந்தவாறு காட்சிகள் வைத்திருப்பார், அதை தாண்டி இசையாக ஒரு எனர்ஜி கொடுக்க வேண்டும். அப்படித்தான் பணிபுரிந்து வருகிறேன்” என்று தெரிவித்துள்ளார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் ‘குட் பேட் அக்லி’. ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கியுள்ள இப்படத்தில் அஜித், த்ரிஷா, பிரசன்னா, சுனில், அர்ஜுன் தாஸ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இதன் பாடல்களை தேவி ஸ்ரீபிரசாத் உருவாக்கி இருக்கிறார். ஏப்ரல் 10-ம் தேதி இப்படம் வெளியாகவுள்ளது. இதன் தமிழக உரிமையினை ராகுல் கைப்பற்றி இருக்கிறார்.

# ரங்கராஜ சக்திவேல் நாயக்கர் நல்லவரா கெட்டவரா? - கமல் அளித்த பதில்





சென்னையில் ‘ஃபிக்கி (FICCI) ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு வணிக மாநாடு (MEBC)–சவுத் கனெக்ட் 2025’-ஐ தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நடிகர் மற்றும் இயக்குநர் கமல்ஹாசனுடன் இணைந்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் FICCI ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு (தெற்கு) அமைப்பின் தலைவராக கமல்ஹாசன் அறிவிக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சியில் கமல் - த்ரிஷா இணைந்து கேள்விகளுக்கு பதிலளித்தார்கள். அப்போது “ரங்கராஜ சக்திவேல் நாயக்கர், நல்லவரா கெட்டவரா?” என்று கமலிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு “நான் திரும்ப மணிரத்னம் சாரை சந்திக்க வேண்டாமா? என்ன சார் கஷ்டப்பட்டு எடிட் எல்லாம் செய்துக் கொண்டிருக்கிறேன். எடிட்டே இல்லாமல் மொத்த கதையையும் தட்டிவிட்டீர்களே என்று கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும். அந்தப் படம் பார்த்தீர்கள் என்றாலும் உங்கள் கேள்விக்கு விடை கிடைக்காது. அவர் நல்லதும் கெட்டதும் சேர்ந்தவர் தான்” என்று பதிலளித்தார். மணிரத்னம் இயக்கியுள்ள ‘தக் லைஃப்’ படத்தில் ரங்கராஜ சக்திவேல் நாயக்கர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் கமல். இதில் சிம்பு, த்ரிஷா, ஐஸ்வர்ய லட்சுமி, ஜோஜு ஜார்ஜ் உள்ளிட்ட பலர் கமலுடன் நடித்துள்ளனர். ராஜ்கமல் நிறுவனம், மெட்ராஸ் டாக்கீஸ் மற்றும் ரெட் ஜெயன்ட் மூவிஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இப்படத்தினை தயாரித்துள்ளன.

# வாஸ்போ செஸ் போட்டி: சென்னை மாணவிகள் முதலிடம்




எம்ஓபி வைஷ்ணவா மகளிர் கல்லூரி சார்பில் வாஸ்போ மாநில அளவிலான கல்லூரிகள், பள்ளி மாணவிகளுக்கான செஸ் போட்டி சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்றது. இதில் கல்லூரிகள் பிரிவில் 150 பேரும், பள்ளிகள் பிரிவில் 300 பேரும் பங்கேற்றனர். கல்லூரிகள் பிரிவில் நாகர்கோவிலை சேர்ந்த ரெபேக்கா ஜெசுமரியன் (ஹோலி கிராஸ்) சாம்பியன் பட்டம் வென்றார். பள்ளி மாணவிகளுக்கான 18 வயதுக்குட்பட்டோர் பிரிவில் கீர்த்தி ஸ்ரீ ரெட்டியும் (வேலம்மாள் மெட்ரிகு ரிகுலேசன்), 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தீபிகாவும் (வேலம்மாள் வித்யாலயா) முதல் இடத்தை பிடித்தனர். வெற்றி பெற்றவர்களுக்கு கிராண்ட் மாஸ்டர் ஆர்.வைஷாலி பரிசுகளை வழங்கினார். செஸ் குருகுல் அமைப்பின் சிஎஃப்ஓ ஆர்த்தி ராமசாமி, வைஷ்ணவா கல்லூரி முதல்வர் அர்ச்சனா, உடற்கல்வி இயக்குநர் அமுதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 3 இடங்களை பிடித்தவர்களுக்கு முறையே ரூ.20 ஆயிரம், ரூ.15 ஆயிரம், ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

# மகாராஷ்டிரா ஓபன்: இறுதிப் போட்டியில் ஜீவன் நெடுஞ்செழியன் ஜோடி



புனே: மகாராஷ்டிரா ஓபன் ஏடிபி சாலஞ்சர் டென்னிஸ் போட்டி புனேவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் இரட்டையர் பிரிவு அரை இறுதி சுற்றில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், விஜய் சுந்தர் பிரசாந்த் ஜோடி, இந்தியாவின் நிக்கி கலியாண்டா பூனாச்சா, ஜிம்பாப்வேயின் கர்ட்னி ஜான் லாக் ஜோடியை எதிர்த்து விளையாடியது. இதில் ஜீவன் நெடுஞ்செழியன், விஜய் சுந்தர் பிரசாந்த் ஜோடி 7-6(5), 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த ஜோடி இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவின் பிளேக் பெய்ல்டன் மேத்யு, கிறிஸ்டோபர் ரோமியோஸ் ஜோடியை எதிர்கொள்கிறது. இந்த ஜோடி அரை இறுதி சுற்றில் 6-3, 3-6, 10-5 என்ற செட் கணக்கில் பிரிட்டனின் ஜெய் கிளார்க், ஆஸ்திரியாவின் ஜூரிஜ் ரோடியோனோவ் ஜோடியை தோற்கடித்தது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066